8th August 1966]

திரு. வை. சங்கரன் : நெய்வேலி யூரியா உரத் தொழிற்சாலையில் பூரண அளவு உற்பத்தி தொடங்கிவிட்டதா ? அதில் உற்பத்தியாகக் கூடிய உரம் அத்தனையும் 'ஸென்ட்ரல்பூல்'-இல் சேர்க்கப்பட்டு, பிறகு தான் நமக்கு ஒதுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இன்னும் பூரண உற்பத்தி ஏற்படவில்லை. உற்பத்தியெல்லாம் 'ஸென்ட்ரல் பூல்'-இல் தான் போகும். எல்லா மாநிலங்களுக்கும் பிரித்துக் கொடுப்பார்கள்.

இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை

*208 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் மெஷீன் கருவிகள் செய்யும் தொழிற்சாலை நிறுவுவது சம்பந்தமாய், சமீபத்தில் ஜப்பானியத் தொழிற் குழுவினர் நமது ராஜ்யத்தில் எந்தெந்த இடங்களைச் சுற்றிப் பார்த்தனர் ?

(இ) அதன்பின், இந்த ராஜ்ய அரசாங்கத்துடன் கலந்து ஏதேனும் முடிவு எடுத்துள்ளனரா ?

(உ) ஆமெனில், அதன் விபரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Japanese team inspected some areas near Madras, Ranipet, Madurai and Tiruchirappalli.

(*b*) & (*c*) The proposal was discussed by the Japanese team with the Madras State Industrial Development Corporation and as a result, the Japanese Machine Tool Trade Association has been asked to prepare a project report. The Madras State Industrial Development Corporation has also applied to the Government of India for the grant of an Industrial licence.

திரு. எம். எஸ். செல்வராஜன் : மெஷின் கருவிகள் செய்யும் தொழிற்சாலை அமைப்பதற்கு அடிப்படையான வசதிகள் என்ன என்ன தேவை ? இந்தக் குழுவினர் மதுரைக்குத் தென் பக்கத்தில் இருக்கும் ஜில்லாக்களை ஏன் பரிசீலனை செய்யவில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எங்கு வேண்டுமானாலும் செய்யலாம். இப்பொழுது சென்னை, இராணிப்பேட்டை, மதுரை, திருச்சி ஆகிய இந்த நான்கு இடங்களில் பரிசீலனை செய்திருக்கிறார்கள். மற்ற இடங்களில் இடம் இல்லை என்பதல்ல. நான்கு இடங்களில் பரிசீலனை செய்தார்கள். இப்பொழுது எங்கே கொடுப்பது என்பது முடிவு செய்யப்படவேண்டும்.

போல்ட்ஸ், நட்ஸ் தொழிற்சாலை

*209 கேள்வி.—திரு. நா. இராசாங்கம் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பன்னுருட்டி, குறிஞ்சிப்பாடி, வடலூர் ஆகிய இடங்களில் Bolts and nuts

தொழிற்சாலை அமைக்க கைத்தொழில் வர்த்தகத்துறை உதவி நெறியாளர் ஏதேனும் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறாரா ?

(இ) ஆம் எனில், மேற்கூறிய இடங்களில் எங்கு அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ?

(உ) எப்போது அமைக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a) No.

(b) & (c) Do not arise.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : சிறிய சிறிய தொழில்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தருவோம் என்று சொல்கிற நம் சர்க்கார் போல்ட், நட்டுக்குக் கூட வசதி இல்லை என்று சொல்கிறார்களே, என்ன காரணம் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போல்ட், நட்டுக்குக் கூட வசதி இல்லை என்று சொல்லவில்லை. இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லி இருக்கிறேன்.

இலங்கையில் இருந்து குடி பெயர்ந்தோர்

* 210 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடந்த 12 ஆண்டுகளாக இலங்கையிலிருந்து வந்து வேலை கோரிப் பதிவு செய்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் வேலை பெற்றிருப்பவர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) According to the current practice, the Employment Exchanges neither identify the Ceylon repatriates separately at the time of registration nor maintain separate statistical data regarding them. As such only the following particulars are available :

1.	Number of Ceylon repatriates on Live Registers of Employment Exchanges in the State on 1st April 1965	40
2.	Number of Ceylon repatriates registered during the period from 1st April 1965 to 31st March 1966	134
3.	Total number of Ceylon repatriates on the Live Registers of Employment Exchanges in the State as on 31st March 1966	79

(b) 8 persons were placed in employment during the period from 1st April 1965 to 31st March 1966.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய விவரங்களைப் பார்த்தால் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகவும், வேலை பெற்றவர்களின்